# பொது அறிவுச்சரம்

தொகுதி - 2



- புன்னியாமீன் -

# பொது அறிவுச் சரம்

## தொகுதி - 2

### - புன்னியாமீன் -

வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்'
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

'சிந்தனை வட்டத்தின் 227வது வெளியீடு'

**பொது அறிவுச் சரம் (தொகுதி - 2)**

ஆசிரியர் : பி.எம். புன்னியாமீன்
பதிப்பு : 1ம் பதிப்பு - செப்டம்பர் 2006
வெளியீடு : *சிந்தனை வட்டம்.*
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
கணனிப்பதிப்பு: எஸ்.எம். ரமீஸ்தீன்
ISBN : 955-8913-51-0
பக்கங்கள் : 40

**Pothu Ariwuch Charam (Vol - 2)**

Subject : Collection of National and International General afiairs (Vol - 2)

Author : **P.M.Puniyameen**
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition September 2006
Language : Tamil
Type Setting : S.M.Rameezdeen
ISBN : 955-8913-51-0
Pages : 40

**60/=**

**© P.M.Puniyameen 2006**
All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும், பொது அறிவை வளர்க்க விரும்புவோருக்குமான வழிகாட்டி நூல்

# நீங்கள் ஒரு புத்திசாலியா ?

பெரிய கொடை வள்ளல் ஒருவர் ஒவ்வொரு நாளின் ஆரம்பத்திலும் உங்கள் கணக்கில் 86,400 ரூபாவை வைப்பில் இடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் ஒரு நிபந்தனையும் விதிக்கிறார். ஒவ்வொரு நாளும் வைப்பிலிடப்படும் தொகையை நீங்கள் அந்த நாள் முடிவடைய முன் பயன்படுத்தியாக வேண்டும், நீங்கள் அதனை முற்றாகப் பயன்படுத்தி முடிக்காவிட்டால் மீதியுள்ள தொகை உங்கள் கணக்கிலிருந்து நீக்கப்பட்டுவிடும். எனினும் மறுநாள் புதிதாக 86,400 ரூபா வைப்பிலிடப்படும். இவ்வாறு தொடர்ந்து வருடத்தில் 365 நாட்களும் அவர் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இந்நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள் ? நிச்சயமாக நீங்கள் புத்திசாலியாக இருந்தால் ஒவ்வொரு நாளும் முடிவடைய முன் கிடைக்கும் ஒவ்வொரு ரூபாவையும் முற்றாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பீர்கள் அல்லவா ?

ஆனால் இதுபோன்ற ஒரு நிகழ்வு எங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. பெரும் கொடையாளனான இறைவன் ஒவ்வொரு நாள் ஆரம்பிக்கும் போதும் எமக்கு மிகப் பெறுமதியான 86400 வினாடிகளை வழங்கு கிறான். அந்தத் தினம் முடிவடைய முன் நாம் அந்த முழு நேரத்தையும் முற்றாகப் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் அது எமக்குத் திருப்பிக் கிடைக்கப் போவதில்லை. எனவே தமக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு வினாடியையும் முழுமையாகப் பயன் படுத்திக் கொள்கின்றவர்களே உண்மையான புத்திசாலிகளாவர். ஒரு வினாடியை யேனும் வீணாகத் தவறவிடுபவர்கள் இறைவனின் அருட்கொடையைப் புறக்கணிப் பவர்களாகவே இருப்பர். ஆம்! நேரம் கடந்துகொண்டே இருக்கிறது. அதை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளுங்கள்!

*ஒரு வருடத்தின் பெறுமதியைப் பற்றி வருடாந்தப் பரீட்சையில் தோல்வியுற்ற மாணவனிடம் கேளுங்கள்.*

*ஒரு மாதத்தின் பெறுமதியைப் பற்றி குறைமாதக் குழந்தையைப் பிரசவித்த தாயிடம் கேளுங்கள்.*

*ஒரு வாரத்தின் பெறுமதியைப் பற்றி ஒரு வார சஞ்சிகையின் ஆசிரியரிடம் கேளுங்கள்.*

*ஒரு நாளின் பெறுமதியைப் பற்றித் தான் எதிர்பார்த்த கடிதம் கிடைக்கப்பெறாத ஒருவரிடம் கேளுங்கள்.*

*ஒரு மணித்தியாலத்தின் பெறுமதியைப் பற்றிப் போர்க்களத்தில் ஓய்வு அனுமதிக்கப்பட்ட போர் வீரனிடம் கேளுங்கள்.*

*ஒரு நிமிடத்தின் பெறுமதியைப் பற்றி புகைவண்டியொன்றைத் தவற விட்டவனிடம் கேளுங்கள்.*

*ஒரு செக்கனின் பெறுமதியைப் பற்றி விபத்தொன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிய ஒருவரிடம் கேளுங்கள்.*

*ஒரு மில்லி செக்கனின் பெறுமதியைப் பற்றி ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கத்தைத் தவறவிட்ட 100 மீட்டர் ஓட்ட வீரரிடம் கேளுங்கள்.*

நன்றி : அரும்பு



# இலங்கை கல்வி அபிவிருத்தியின் முக்கிய கட்டங்கள்

1. 1931 — டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கிணங்க இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் பொதுமக்களுக்குக் கல்வியூட்டும் முயற்சிகள் துரிதமாக்கப்பட்டன.

2. 1943 — 1943ம் ஆண்டில் 26ம் இலக்க தவணை அறிக்கையில் முதன்முதலாக இலவசக் கல்விக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. இதனை கன்னங்கர அவர்கள் முன்வைத்தார்கள். இதனால் இலவசக் கல்வியின் தந்தை என இவர் அழைக்கப்படுகின்றார்.

3. 1945 — இல்ங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

4. 1956 — சுய மொழிகள் போதனா மொழிகளாக மாற்றப்பட்டன. அதன் விளைவாக இலங்கை மக்களுக்கு கல்வியைப் பரவலாகப் பெறும் வாய்ப்பு உருவாகியது. செல்வந்தர களின் ஆங்கிலப் பாடசாலைகளுக்கு ஏகபோக உரிமையாகவும் இருந்த கல்வி பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை பொதுமக்கள் உரித்தாகியது.

5. 1980 — இலங்கையில் சகல பாடசாலைகளுக்கும் இலவசப் பாட நூல்கள் விநியோகிக்கப்பட்டன.

6. 1989 — இலவச மதிய உணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1989.05.02 திகதியிலிருந்து மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்பட்டது.( இத்திட்டம் பின்னர் கைவிடப் பட்டது.)

7. 1991 — உணவுக்குப் பதில் மாணவர்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டன. இவர்கள் ப.நோ.கூ. சங்கத்திலி

ருந்து தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. (பின்பு இத்திட்டமும் செயலிழந்தது.)

8. 1993 — 1993-01-18ம் திகதி முதல் இலவசச் சீருடைகள் விநியோகிக்கப்பட்டன.

9. 1998 — க.பொ.த. உயர்தரப் பாடங்கள் 4 பாடங்களுக்குப் பதிலாக 3 பாடங்களாகக் குறைக்கப்பட்டன. தாவரவியல், விலங்கியல் என்பவற்றிற்குப் பதிலாக உயிரியல் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறே கணிதம், கலை ஆகிய பிரிவுகளிலும் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

10. 2000 — பல்கலைக்கழக அனுமதிக்காக பொது உளச்சார்பு போட்டிப் பரீட்சை முறை அமுலாக்கப்பட்டது.

## இலங்கையின் ஆசிரியர் சேவை

31.10.1994 திகதியிடப்பட்ட இலக்கம் 843/4 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 06.10.1994 முதல் நடைமுறைப்படத்தக்கவாறு இலங்கையின் ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாறு தாபிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை இலக்கம் 865/3 03.04.1995 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணத்தின் படி நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கை ஆசிரியர் சேவை 3 வகுப்புக்களைக் கொண்டுள்ளது. இவற்றில் 5 தரங்கள் காணப்படுகின்றன.

(1) 1 ம் வகுப்பு

(2) 2 ம் வகுப்பு
- 2 ம் வகுப்பு 1 ஆந் தரம்
- 2 ம் வகுப்பு 2 ஆந் தரம்

(3) 3ம் வகுப்பு
- 3 ம் வகுப்பு 1 ஆந் தரம்
- 2 ம் வகுப்பு 2 ஆந் தரம்



## இலங்கையின் பாடசாலை வகைகள்

இலங்கையிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(1) AB வகைப்பாடசாலைகள்
(2) IC வகைப்பாடசாலைகள்
(3) 2 ம் வகைப்பாடசாலைகள்
(4) 3 ம் வகைப்பாடசாலைகள்

### AB வகைப்பாடசாலைகள்

க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானம் உட்பட சகல கற்கை நெறிகளையும் கொண்ட பாடசாலைகள் AB வகைப்பாடசாலைகளாகும்.

### IC வகைப்பாடசாலைகள்

உயர்தர பிரிவில் கலை/வர்த்தகம் உட்பட ஏனைய வகுப்புகள் உள்ள பாடசாலைகள் இவ்வகையினுள் அடங்கும்.

### 2 ம் வகைப்பாடசாலைகள்

1 - தொடக்கம் 11 வரை வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகள் இப்பிரிவுக்குள் அடங்கும்.

### 3 ம் வகைப்பாடசாலைகள்

1- தொடக்கம் 5 வரை வகுப்புகள் உள்ள பாடசாலைகள் அல்லது 1 - 8 வரை வகுப்புகள் உள்ள பாடசாலைகள் இப்பிரிவுக்குள் அடங்கும்.

**உலகின் முக்கிய சுவர்கள்**

| | |
|---|---|
| சீனாவின் பெருஞ்சுவர் - | இது உலகின் பெருஞ்சுவர், சீனாவில் உள்ளது. 2710 கி.மீ. நீளமும் $4\frac{1}{2}$ முதல் 12 மீ உயரமும் கொண்டது. |
| ஹாட்ரியன்ஸ் சுவர் - | இது இங்கிலாந்தில் 120 கி.மீ. நீளத்தில் உள்ள சுவர். கி.பி. 122ல் கட்டப்பட்டது. இது பௌனெஸ் - என் - சால்வேயிலிருந்து நியூகேசில் வரை செல்லுகிறது. |

# உலகக் குடிமகன் விருது 2006

ஐ.நா. கரஸ்பாண்டன்ஸ் சங்கம் (யு.என்.சி.ஏ) என்ற அமைப்பு சர்வதேச அளவில் சிறப்பான மக்கள் சேவைகள் செய்துவரும் நபர்களை தேர்வு செய்து ஆண்டுதோறும் உலக குடிமகன் விருதை வழங்கி வருகிறது. 2006 ம் ஆண்டுக்கான விருது அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பிள்கிளின்டனுக்கு வழங்கப்படவுள்ளது.

ஐ.நா. சிறப்பு தூதராக பணியாற்றிய வியராடி மெல்லோவிற்கு மரியாதை செய்யும் வகையிலும் அவரின் நினைவாகவும் இவ்விருது வழங்கப்படுகிறது. யு.என்.சி.ஏ. தலைவர் மசூத் ஹைதர், இந்த ஆண்டிற்கான விருது குறித்து அறிவித்தார்.

ஆசிய கண்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களின் வீடுகளையும், வாழ்க்கை ஆதாரங்களையும் இழந்து தவித்தனர். இந்த இக்கட்டான நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட கிளின்டன் செய்துள்ள சேவை பாராட்டத்தக்கது. சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 நாடுகளுக்கு நேரில் சென்ற அவர் முகாம்களை அமைத்து மக்களுக்காகத் தொடர்ந்து சேவைகளை செய்துள்ளார்.

மக்களின் மறுவாழ்விற்காக நிதி திரட்டும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இதுபோன்ற கடுமையான பாதிப்புகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க சுனாமி எச்சரிக்கை மையத்தின் தேவையையும் வற்புறுத்தினார். அவரின் இந்த சேவையை பாராட்டி 2006 ம் ஆண்டிற்கான உலக குடிமகன் விருது வழங்கப்படுகிறது.



<u>பிற்குறிப்பு</u> :

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரும் சுனாமி நிவாரணத்திற்கான ஐ.நா.சிறப்பு தூதவருமான கொபி அனான் எதிர்வரும் 2006 டிசம்பர் 8 ம் திகதி கிளின்டனுக்கு இந்த விருதை வழங்கவுள்ளார்.



# இலங்கையின் நீர்ப்பாசன முறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செலுத்திய பொலன்னறுவை யுகத்தைச் சேர்ந்த பிரதான மன்னர்களும், அவர்களின் சாதனைகளும்

1. <u>முதலாம் விஜயபாகு (கி.பி. 1070-1110)</u>
ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டிருந்த கால்வாய், குளங்கள் என்பவற்றைப் புனரமைப்புச் செய்தான்.

உ+ம். அலகர கால்வாய், மின்னேரி, கவுடுலு, கந்தளாய் நீர்ப்பாசன முறைகளை உரிய நிலைக்குக் கொண்டு வந்ததைக் குறிப்பிடலாம்.

2. <u>முதலாம் பராக்கிரமபாகு (கி.பி.1153- 1186)</u>

அ. வானிலிருந்து விழும் ஒரு துளி நீரைத்தானும் மனிதனுக்குப் பயன்படாது சமுத்திரத்தைச் சென்றடைய விடக் கூடாது எனக் கூறிய மன்னன் இவனாவான்.

ஆ. இவனது ஆட்சிக்காலமே நீர்ப்பாசனத் துறையின் பொற்காலம் எனக் கருதப்படுகின்றது. இவனால் 163 குளங்கள் நிர்மாணிக்கப்பட்டது என சூலவம்சம் குறிப்பிடுகிறது.

இ. இவன் பொலநறுவை மன்னனாவதற்கு முன்னர் தெதுறு ஓயாவில் மூன்று இடங்களை மறித்து அணைகளைக்கட்டி கால்வாய்கள் வழியே தாழ்ந்த பிரதேசச் சமவெளிப் பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்கினான். பண்டாவாவியைப் பெருப்பித்தான். பஸ்துன் கோறளை சதுப்பு நிலத்தின் ஒரு பகுதியை மீட்டு விளை நிலமாக்கினான். இதன் வாயிலாக ஈரவலயத்தையும் நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டுவந்த பெருமை இவனைச் சாருகின்றது.

ஈ. "பராக்கிரம சமுத்திரம்" இவனாலேயே அமைக்கப்பட்டது. இது தோபா வாவியையும், தும்புலு வாவியையும் தொடுத்து அமைக்கப்பட்டதாகும்.

உ. அங்கமடில்ல அணை - மகாவலியின் கிளை நதியான அம்பன் கங்கையின் குறுக்கே அங்கமடில்ல எனும் இடத்தில் இவனால் கட்டப்பட்ட அணை இதுவாகும். இங்கு அமைக்கப்பட்ட அங்கமடில்ல கால்வாய் (ஆகாச கங்கை) மூலம் பராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் வழங்கப்பட்டது. அதுவும் அவ்வாவியை நிரப்பப் போதாமல் இருக்கவே மினிப்பே கால்வாயை மேலும் விஸ்தரித்து அம்பன் கங்கையின் நீர்வளத்தைப் பெருக்கி பராக்கிரம சமுத்திரத்தை நிறைத்தான். இலங்கை வரலாற்றில் மிகப் பெரும் குளம் என்ற பெயரை 800 ஆண்டுகளாக இது பெற்றிருந்தது.

* (துரித மகாவலித்திட்டத்தில் அமைக்கப்பட்ட ரந்தனிகல நீர்த் தேக்கம் இன்று அவ்விடத்தைப் பெற்றுவிட்டது).

3. <u>நிஸ்ஸங்கமல்ல மன்னன் கி.பி.(1187-1196)</u>

நிர்மாணித்த குளம் - நிஸ்ஸங்க சமுத்திரம்.

★ அனுராதபுர, பொலநறுவைக் காலப்பகுதிகளில் நீர்ப்பாசன அமைப்புடன் சம்பந்தப்பட்ட ஆறுகளையும் அவற்றின் மூலம் நீர் வழங்கப்பட்ட குளங்களையும் தருக.

அ மல்வத்து ஓயா -
அவயவாவி, திசாவாவி, நுவரவாவி, மகவிலச்சியக் குளம், மகாகணதறாவவாவி, மஹகடவல வாவி.

ஆ. மல்வத்துஓயா, கலா ஓயா
கலாவாவி, யோத கால்வாய்.



இ. மகாவலி, அம்பன் கங்கை.
மின்னேரியாக் குளம் , கிரிதலேக் குளம், கந்தளாய்க்குளம், பராக்கிரம சமுத்திரம், எலகரக் கால்வாய், மினிப்பே அணை, மினிப்பே கால்வாய் உறத்தொட்ட அணை.

ஈ. ஹுருலு ஓயா.
ஹுருலுக் குளம் (குறுலு வாவி)

<u>நீர்வள நாகரிகத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும்.</u>

இலங்கையில் நீர்வள நாகரிகம் தோன்றி வளர்ச்சியடைந்தமைக்கான காரணம் என்ன?

1. விவசாயத்தின் வளர்ச்சிமூலம் மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிட்டியமை.

2. விவசாய வேலைகள் குறைவாக இருந்த காலங்களிலே மக்களுக்குப் போதிய ஓய்வு கிடைத்தமை.

பௌத்த மதம் இங்கே கொண்டுவரப்பட்டமைக்கு முன்னர் இங்கு காணப்பட்ட வழிபாட்டு முறைகள் என்ன?

1. விருட்ச வணக்கம்.
2. சைன வணக்கம்.
4. பிசாசு வணக்கம்.
5. இறந்தோரை வணங்கும் முறை.

இலங்கைக்கு பௌத்த மதம் யாரால் எப்போது கொண்டுவரப்பட்டது ?

* கி.மு. 247ல் பொசன் மாதத்தில் மஹிந்தத் தேரரினால். (மஹிந்தத் தேரர் மௌரியப் பேரரசன் அசோகனின் மகனாவார்)

இலங்கைக்கு முதன் முதலில் ஸ்ரீ மகாபோதி விருட்சக்கிளை ஒன்றினை எடுத்து வந்தவர் யார் ?

பிக்குணி சங்கமித்தை. (இவர் மஹிந்த தேரரின் சகோதரியாவார்) இவர்களால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட மதம் மூன்றாவது பௌத்த பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட தேரவாத பௌத்த மதமேயாகும்.

இந்த போதி விருச்சக்கிளை எங்கு நடப்பட்டது ?

மகா மெவனப் பூங்காவில்.

பௌத்த மதம் விரைவிற் பரவுவதற்கு அனுகூலமாக இருந்த காரணிகள் யாவை?

அ. அரசர்களும், அமைச்சர்களும், முதன்மையான மக்களும் முதலில் பௌத்த மதத்தைத் தழுவியமை.

ஆ. பௌத்த மதம் பரவ முன்னர் காணப்பட்ட வழிபாட்டு முறைகளும், நம்பிக்கைகளும், வலுவுள்ளனவாகவோ கட்டுக்கோப்புடையனவாகவோ இருக்காமை.

இ. பௌத்த மதத்துடன் மௌரியக் கட்டடக்கலை, சிற்பக்கலை, எழுத்துத் தொகுதிகள், இலக்கியம் என்பனவும் கொண்டுவரப்பட்டமை.

ஈ. வழிபாட்டுத் தலங்கள் (சைத்தியங்கள், விகாரைகள்) தோன்றியமை.

உ. மக்கள் வாழ்க்கை முறையுடன் பௌத்த மதம் விரைவில் இணைந்தமை.

ஊ அரசர்கள், தலைவர்கள் பௌத்த தர்மம் பரவ ஆதரவு அளித்தமை.



பௌத்த மதம் இலங்கையில் பரவியதன் விளைவுகள் யாவை?

அ. கட்டுக்கோப்பான மதம் இலங்கைக்குக் கிடைத்தமை.

ஆ. பிராமி எழுத்துக்கள் சிங்கள நெடுங்கணக்கின் தோற்றத்திற்கு வித்தாக அமைந்தமை.

இ. மக்கள் மத்தியில் அமைதி, அரசியல் பண்பாடு, ஒற்றுமை ஏற்பட்டமை.

ஈ. உயரிய இலக்கியங்கள் தோன்றியமையும், சமய இலக்கியங்கள் உருவானமையும்.

உ. கட்டிடக் கலை, சிற்பக்கலை , செதுக்கற்கலை, ஓவியக்கலை வளர்ந்தமை.

ஊ. விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்டு வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டமை.

எ. மக்களிடையே அகிம்சை தத்துவம் நிலைபெற்றமை.

## மொழி இலக்கியம்.

இலங்கையில் மூலமொழி எனக் கருதப்படுவது யாது?

ஹெலமொழி .

மஹிந்த தேரரினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட எழுத்துவடிவம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

பிராமி எழுத்து வடிவம்.

இராமன் - சீதை கதையைவைத்து கி.பி. 5ம் நூற்றாண்டில் குமாரதாச மன்னரினால் எழுதப்பட்ட காவியம் எது? எம்மொழியில் எழுதப்பட்டது ?

யானகீறஹரணய.
எழுதப்பட்ட மொழி - வடமொழி

## கட்டடக் கலை

புராதன கட்டடக்கலையின் விசேட அம்சங்களைத் தருக:

* பௌத்த மதத்துடன் இணைந்ததாகும். இக் கட்டடக்கலையானது நீர் வள நாகரிகத்துடன் தழுவி வளர்ச்சி பெற்றது. இக் கட்டடக் கலையானது இரண்டு அம்சங்களில் வளர்ச்சிபெற்றிருந்தது.

அ. வழிபாட்டுக்குரிய நிலையங்களின் அமைப்பு முறை.

உ+ம் தாகபைகள், போதிமனைகள், சிலைக்கூடம்,

1. தாகபையைத் தழுவி நான்கு திசைகளிலும் முகப்பு வைத்துக் கட்டப்பட்ட வாயில் - மண்டபங்களைப் போன்றதாக நுழைவாயில்கள் அமைக்கும் முறை வளர்ந்தமை.

2. சிறிய தூபிகளைச் சுற்றி வட்ட தாது மனைகள் அமைக்கப்பட்டமை.

3. சைத்தியங்களைச் சுற்றி ஆரம்ப காலத்தில் மரத் தூண்களை மூன்று வரிசைகளில் நாட்டி அவற்றுக்கு மேல் பக்க மரங்களைப் பொருத்தி முக்கோண உருவக் கூரை அமைக்கப்பட்டமை.



4. தாகபையின் சிகரத்திற்குமேல் கூம்பு உச்சியும் கூரையும் அமைக்கப்பட்டமை.

ஆ. குருமார்களுக்குரிய விகாரை இல்லங்களையும் ஏனைய சமயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய கட்டடங்களையும் அமைக்கும் முறை.

உ+ம். போயா மனை, சிலைக்கூடம், வைத்தியசாலை, ஸ்நான தாடகம், மலகூடம்..

பெரிய தூபிகளை அமைத்த மன்னர்களையும், அவர்கள் அமைத்த தூபிகளையும் குறிப்பிடுக ?.

| | | |
|---|---|---|
| துட்டகைமுனு | - | ருவன் வெலிசாயா (மகாதூபய) மிரிசவெட்டிய தாகப. |
| வலகம்பா | - | அபயகிரி தாகப. |
| மகாசேனன் | - | ஜேதவன தாகப. |

புராதன கட்டிடக்கலையின் சிறப்பினைக் காட்டும் அரண்மனைச் சிதைவுகள் யாவை?

அ. மகாவிஜயபாகு மன்னனின் மாளிகை - (பொலநறுவை).

ஆ. 1ம் பராக்கிரமாகு மன்னனின் மாளிகை - (பண்டுவஸ்நுவர) பொலன்னறுவை.

இ. நிஸங்கமல்லனின் - மாளிகை. பொலன்னறுவை.

## செதுக்கற் கலையும், சிற்பக்கலையும்,ஓவியக்கலையும்

இலங்கையில் செதுக்கற்கலை, சிற்பக்கலை என்பவற்றின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார் ?.

பிக்குனி சங்கமித்தையும், அவருடன் இங்கு வந்த செதுக்கற்கலைஞர்களும், சிற்பக் கலைஞர்களும்.

இலங்கையின் செதுக்கற்கலையின் ஆரம்பத்தில் எத்தகைய தாக்கத்தினைக் காண முடிகிறது ?

அசோக சக்கரவர்த்தியின் ஞாபகத்தூபிகளில் காணப்பட்ட உருவங்கள்.

உ+ம். யானை, சிங்கம், குதிரை, விருஷபம், போன்ற உருவங்கள்.

இலங்கைக்குரிய தனிச் சிறப்புடன் வளர்ந்த செதுக்கற் கலைக்கு சிறந்த உதாரணமாகக் கூறப்படுவது......

சந்திரவட்டக்கல் - இது செதுக்கல் வேலைப்பாடுடைய பிறை வடிவிலான ஒரு கற்பாலமாகும்.

அனுராதபுர, பொலனறுவை யுகத்தில் வளர்ச்சியடைந்த சிற்பக்கலைக்குரிய உதாரணங்களைத் தருக.

* தேவாலயங்களுக்குச் செல்லும் படி வரிசைகளின் அடியிலுள்ள அழகிய வட்டக்கல், காவற்காரன் உருவம், சொறவக்கல்.
* இசுறுமுனிக்காதலர் சோடி.
* இசுறுமுனி கல்லில் செதுக்கப்பட்டுள்ள குதிரைத் தலையுடைய மனிதன்.
* அவுக்கணை, றுஸ்ஸேறுவ, பிதுறுதலாகலை ஆகிய இடங்களில் நிற்கும் பெரிய புத்தர் சிலை.
* அனுராதபுர சமாதிச் சிலை.



சீகிரிய ஓவியங்கள் இந்தியாவில் எத்தகைய ஓவியங்களை ஒத்தனவாகக் காணப்படுகின்றன.?

அஜந்தா ஓவியங்கள்.

சீகிரிய குகை ஓவியங்கள் பற்றிச் சிறுகுறிப்பெழுதுக.

* கி.பி. 5ம் நூற்றாண்டுக்குரியன என்று பொதுவாகக் கருதப்படும் சீகிரிய குகை ஓவியங்களில் அழகிய பெண் உருவங்கள், தாமரை, நிலோற்பலம், அல்லி போன்ற மலர்களைச் சூடிக்கொண்டு, கைகளில் ஏந்தி வைத்திருப்பதைக் காணலாம். தங்க நிறமும், நீல நிறமும் பொருந்திய இப்பெண் உருவங்கள் பெரும்பாலும் சோடிகளாக வரையப்பட்டுள்ளன.

நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணிகளைக் கூறுக?

கி.மு. 6ம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 12ம் நூற்றாண்டு வரை அனுராதபுர, பொலன்னறுவை காலங்களில் முக்கியமாக உலர்வலயப்பகுதியில் வளர்ந்திருந்த நீர்வள நாகரிகம் பொலன்நறுவை காலத்தின் இறுதியில், அதாவது கி.பி. 1215ல் ஏற்பட்ட மாகனின் படையெடுப்புடன் முற்றுமுழுதாக அழிந்தது. இத்தகைய வீழ்ச்சிக்கான காரணங்களாவன.

அ. சிம்மாசன உரிமைபற்றிய பிணக்குகள் எழுந்தமை. சுமார் 20 வருடங்களாக நீடித்த இப் பிணக்கினால் மத்திய நிர்வாகத்தின் வலு குறைந்தது. நீர்ப்பாசனத் திட்டங்களைக்கொண்டு நடாத்துவதற்குரிய ஒழுங்குகள் அற்றுப் போனமை.

ஆ. கலவரங்கள் வெள்ளப் பெருக்குகள் போன்றன. இந்தக் காலங்களிலே குளம், குட்டை, கால்வாய்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதங்களைத் திருத்த முடியாமல்போனமை.

இ. இந் நிலையில் தென்னிந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் வந்த மாகன் பொலநறுவையைப் பிடித்துக் கொடுங்கோலாட்சி புரிந்தமை.

ஈ. இதையடுத்து ராசரட்டை மக்கள் பாதுகாப்புத்தேடி தென்மேற்குத் திசை நோக்கியும், மலயரட்டை. ருகுனு ரட்டை ஆகியவற்றை நோக்கியும் இடம் பெயர்ந்தமை.

உ. மலேரியா நோய் பரவியமை - இது மக்கள் இடம்பெயர்வை விரைவாக்கியது. மீள் குடியமர்த்தலை தடைசெய்தது.

ஊ. பராமரிப்பு அற்றமையால் உலர் வலயம் முழுவதும் காடாக மாறியமை.

### தென் துருவத்தை முதலில் அடைந்தவர்கள்


அமண்ட்ஸன்


ஸ்கொட்

தென் துருவத்தை அடையும் முயற்சியில் முதன் முதலாக ஈடுபட்டவர் பிரிட்டிஷ் ஆய்வாளரான ரொபர்ட் F ஸ்கொட் (Robert Falcon Scott) என்பவராவார். இதற்கான தமது இரண்டாவது முயற்சியை அவரும் அவரது குழுவினரும் 1910 டிசம்பரில் ஆரம்பித்தனர். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் 1912 ஜனவரி 17ம் திகதி தென் துருவத்தை அடைந்தனர்.

ஆனால் அவர்களுக்கு ஐந்து வாரங்களுக்கு முன்பே ரொவால்ட் அமண்ட்ஸன் (Roald Amundsen) என்ற நோர்வே நாட்டவர் தென் துருவத்தை அடைந்திருக்கிறார் என்ற உண்மையை அங்கிருந்த நோர்வே நாட்டுக் கொடியும் ஏனைய சான்றுகளும் எடுத்துக் காட்டின. திரும்பி வரும் வழியில் ஸ்கொட்டும் அவரது சகாக்களும் பனிப்புயலில் சிக்கி பட்டினியாலும் நோயினாலும் இறந்தனர். சில மாதங்களின் பின்னர் அவர்களைத் தேடிச் சென்ற குழுவினருக்கு அவர்களது உறைந்து போன உடல்களும் ஸ்கொட்டின் நாட்குறிப்பேடும் ஏனைய பாவனைப் பொருட்களுமே கிடைத்தன.

அமண்ட்ஸனும் அவரது குழுவினரும் 1911 டிசம்பர் 14ம் திகதி தென் துருவத்தை அடைந்து விட்டுப் பாதுகாப்பாக நாடு திரும்பியது குறிப்படத்தக்கது.



# பொது அறிவுத் துளிகள்

01. முகமது யூனுஸ் நிறுவிய அமைப்பு?
*- பங்களாதேஷத்தின் முதலாவது கிராமிய வங்கி*

02. உலகின் முதலாவது விண்வெளி சுற்றுலாப் பயணி?
*- டென்னிஸ் டிட்டோ*

03. இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் வெளிநாட்டவர், நாடு எது?
*- சுவிஸ்சர்லாந்து*

04. ஆசியாவின் முதல் 'பால் பண்ணை'?
*- ஆரே (AAREY)*

05. இடிஅமீன், ரொபர்ட் கென்னடி, மார்கரெட் தாட்சர் இவர்களுக்கிடையேயான ஒற்றுமை என்ன?
*- பிறந்தது 1925 இல்*

06. நோபல் பரிசுக்கு மாற்றாகக் கருதப்படும் பரிசு?
*- 'ரைட் லைவ்லி ஹூட்' பரிசு*

07. அன்றாடப் பயன்பாட்டிற்காக வெளியிடப்படும் தபால் தலையின் பெயர்?
*- Definitive*

08. 'பெரிய ஆப்பிள்' எனும் புனைப் பெயர் கொண்ட நகரம்?
*- நியுயோர்க்*

09. 'கிம்போ' விமான நிலையம் எங்குள்ளது?
*- தென்கொரியா*

10. சுவிட்சர்லாந்து குடிமக்கள் எத்தனை முக்கிய மொழிகளைப் பேசுகின்றனர்?
*- மூன்று*

11. 'பீமன் ஏர்லைன்ஸ்' எந்த நாட்டைச் சேர்ந்தது?
*- பங்களாதேஷம்*

12. 'கினா' எந்த நாட்டின் புதிய நாணயம்?
*- பாப்புவா நியுகினியா*

13. 'வலெட்டா' எந்த நாட்டின் தலைநகரம்?
*- மால்டா*

14. Deutsahe Post என்பது?
*- ஜெர்மனியின் தபால்துறை*

15. ஆபிரிக்காவின் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடு?

*- நைஜீரியா*

16. பெர்லிங் எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?

*- ஸ்ப்ரீ நதி*

17. 'சாவோ பாவ்லோ' என்பது?

*- பிரேசிலின் மிகப்பெரிய மாநிலம்*

18. உலகில் மிகப்பெரும் கோப்பி உற்பத்தியாளர்கள் யார்?

*- பிரேசில், கொலம்பியா*

19. 'உலக மக்கள் தொகை தினம்' என்று?

*- ஜுலை 11*

20. ஐ.நா. சபையின் தலைமையகம் எங்குள்ளது?

*- நியுயோர்க்*

21. ''அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் தந்தை'' என்று அழைக்கப்படுபவர் யார்?

*- மொன்டெஸ்கியு*

22. ஹிட்லரின் ரகசியப் பொலிஸின் பெயர் என்ன?

*- கிஸ்டாபோ*

23. பாக்கிஸ்தான் ஜெனரல் பர்வேஸ் முஷாரஃப் யாரிடமிருந்து ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டார்?

*- முகம்மது ரபீக்தரார்*

24. இந்த நாட்டின் நாணயம், மற்றும் தேசியப் பறவை Quetzal என்றழைக்கப்படுகிறது?

*- கௌதமாலா*

25. 'பெர்லிங்' சுவரின் நீளம் என்ன?

*- 49 கி.மீ.*

26. ஷேக்ஸ்பிரியரின் 36 நாடகங்களின் மொத்த கதாபாத்திரங்கள்?

*- 850*

27. சிங்கப்பூரின் அலுவலக மொழிகள் யாவை?

*- ஆங்கிலம், மலாய், மண்டாரி, தமிழ்*

28. இத்திரைப்படம் வெளியான ஆண்டு 1972, இதன் இரண்டாம் பாகம் 1974 இலிலும், மூன்றாம் பாகம் 1990 இலிலும் வெளியானது. உலகப் புகழ்பெற்ற இத்திரைப்படம் எது?

*- த கோர்ட் பாதர்*

29. இந்தியாவில் செட்லைட் டி.வி. அறிமுகமான வருடம்?

*- 1992 இல்*



30. புத்த சமயத்தின் மகாயானப் பிரிவை உருவாக்கியவர்?

*- நாகாஜுனர்*

31. இந்தியாவில் ஐரோப்பியரின் முதல் குடியேற்றம் எங்கே நிகழ்ந்தது?

*- போர்ட்கொச்சி*

32. PIN கோடின் விரிவாக்கம்?

- Postal Index Number

33. ரவீந்திரநாத் தாகூர் பிறந்த இடத்தின் பெயர்?

*- ஜொரசாங்கோ குர்பதி*

34. ஒரு பிரதமரின் தந்தையும், மகனும் பிரதமராக இருந்தனர். யார் அவர்?

*- இந்திரா காந்தி (இந்தியா)*

35. ஒரு ஜனாதிபதியின் தாயும், தந்தையும் பிரதமராக இருந்தனர். யார் அவர்கள்?

*- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, SWRD பண்டாரநாயக்க*

36. இலங்கையில் பௌத்த விகாரை கட்டிய சைவ சமயச் சோழப் பேரரசன் யார்?

*- ராஜராஜ சோழன்*

37. உலகிலேயே முதன் முதலாகப் போரில் ராக்கெட்டுக்களைப் பயன்படுத்திய அரசன் யார்?

*- திப்புசுல்தான்*

38. இந்தியாவின் 'பசுமைப் புரட்சி'க்கு வித்திட்ட விஞ்ஞானி யார்?

*- டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்*

39. முதன் முதலாக விண்வெளிப் பயணம் மேற்கொண்ட இந்தியர் யார்?

*- ராகேஸ் சர்மா*

40. இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற முதல் ஆசிரியர் யார்?

*- ரவீந்திரநாத் தாகூர்*

41. 'இந்தியா 2020' எனும் நூலின் ஆசிரியர் யார்?

*- டாக்டர் ஏ.பீ.ஜே. அப்துல் கலாம்*

42. இந்தியாவின் முதல் அணுகுண்டுச் சோதனைகள் பொகரானில் எந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டன?

*- 18.05.1974*

43. ‘கீசக வதம்’ எந்த மொழியின் முதல் திரைப்படம்?

*- தமிழ்மொழி*

44. கர்நாடக சங்கீதத்தில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் முதல் ராகம் எது?

*- மாயாமாளவ கௌளை*

45. இந்தியாவில் இரயில் போக்குவரத்து எப்போது, எங்கே தொடங் கப்பட்டது?

*- 1853 இல் மும்பையிலிருந்து ‘தானே’ மாவட்டத்துக்கு, 34 கி.மீ.*

46. உலகின் மிகப் பெரிய தபால்துறை எந்த நாட்டில் உள்ளது?

*- இந்தியா*

47. இந்தியாவில் தந்தி மற்றும் தொலைபேசி வசதி எப்போது தொடங் கப்பட்டது?

*- 1900*

48. ‘சீதா காப்பாற்றப்பட்டாள்’ ஓவியம் யார் வரைந்தது?

*- எம்.எப். ஹுசைன்*

49. 1932 இல் இந்தியில் வெளியான இந்தியாவில் முதல் பேசும் படம்?

*- அலாம்அரா*

50. Ombudsman பதவி உலகில் முதன் முறையாக எங்கு அறிமுகப் படுத்தப்பட்டது?

*- சுவீடன்*

51. ‘‘வின்னி தி போ’’ எனும் கார்ட்டூன் பாத்திரத்தை உருவாக்கியவர்?

*- ஏ.ஏ. மில்னே*

52. ‘சென்சஸ்’ எனும் இலத்தீன் சொல் எதைக் குறிக்கிறது?

*- குறிப்பேடு*

53. Backlog என்றால் என்ன?

*- முடிக்கப்படாத வேலைகள் குவிந்து இருப்பது*

54. 1999 இல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ‘Medicins Sans Frontiees’ எந்த நாட்டைச் சேர்ந்த அமைப்பு?

*பிரான்ஸ்*

55. ஐ.நாவின் UNOSOM எந்த நாட்டுடன் தொடர்புடையது?

*- சோமாளியா*

56. இலக்சபானா, காசல்றீ, சமனல நீர்மின் நிலையங்கள் எந்த நதியில் அமைந்துள்ளன?

*- களனி கங்கையில்*



57. இலங்கையின் வறுமை ஒழிப்புத்திட்டம் எவ்வாறு அழைக்கப்படு கின்றது?

*- ‘சமுர்த்தி’*

58. இலங்கையின் கலாசார முக்கோணம் எந்த வரலாற்று நகர்களை இணைக்கின்றது?

*- அநுராதபுரம், பொலனறுவை, கண்டி*

59. இலங்கையின் விலங்குப் புகலரங்கள் எவை?

*- வில்பத்து, யால, சோமாவதி, குமண*

60. U.D.A. என்றால் என்ன?

*- நகர அபிவிருத்தி அதிகாரசபை*

61. பாக்கு நீரிணையை முதன்முதல் நீந்திக் கடந்தவர்?

*- நவரத்தினசாமி*

62. கிறிஸ்டோபர் கொலம்பஸ் தனது நான்காம் பயணத்தின் போது சென்ற இடம்?

*- ஹோண்டுராஸ்*

63. சிகாகோ நகரின் சியர்ஸ்டவர்சை வடிவமைத்த பொறியியலாளர் ஃபஸ்லுர் ரஹ்மான்கான் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

*- பங்களாதேஷம்*

64. மோம்பாசா, கிசுமு, நகுரு எந்த நாட்டின் நகரங்கள்?

*- கென்யா*

65. பிரிட்டன் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந் தியர்?

*- தாதாபாய் நௌரோஜி*

66. ஃபிஜி, பாப்வா நியூகினியா மற்றும் கிக்ஸ் திவுகள் எந்த அமைப் பின் உறுப்பினர்கள்?

*- தென் பசுபிக் கூட்டமைப்பு*

67. The 4 Caf என்பது என்ன?

*முழுமையும், பெண்களைக் கொண்ட பொப் குழு*

68. எந்த நாட்டின் அதிபர் ‘மலகாநாக்’ மாளிகையில் வாழ்கிறார்?

*- பிலிப்பைன்ஸ்*

69. The Killing Fields எந்த நாட்டைக் குறிக்கும் திரைப்படம்?

*- கம்போடியா*

70 ஷார்ஜா எந்த நாட்டின் ஒரு பகுதி?

*- ஐக்கிய அரபுக் குடியரசு*

71. முதல் உலகப் போர் அதிகாரபூர்வமாக முடிவுக்கு வந்த ஆண்டு?

*- 1918 நவம்பர் 11*

72. ஒரு வருடத்தில் அமைதிக்கான நோபல் பரிசை ஒரு இஸ்ரேலியரும், ஒரு பலஸ்தீனியரும் பகிர்ந்து கொண்டனர். எந்த வருடம் அது?

*- 1994*

73. நாட்டின் அதிபர் பெயரால் வழங்கப்படும் இந்தோனேஷியாவின் 16,532 அடி உயரமுடைய சிகரத்தின் பெயர் என்ன?

*- சுகர்னோ சிகரம*

74. Beware the Ides of March ஷேக்ஸ்பியரின் எந்த நாடகத்தில் உள்ளவர்கள்?

*- யூலியர் சீசர்*

75. அரபு நாடுகளின் CNN என்று கருதப்படும் தொலைக்காட்சி எது?

*- அல்ஜெஸீரா*

76. ஆபிரிக்காவின் முதல் குடியரசு?

*- லைபீரியா*

77 அட்லாண்டிக் பெருங்கடலைத் தனியாக பறந்து கடந்த முதல் மனிதர்?

*- சார்லஸ் வின் பார்க்*

78. பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்ற முதல் ஆசிரியர் யார்?

*- பேராசிரியர் அமர்த்யாசென்*

79. இந்திய விஞ்ஞானிகளால் சுயச்சார்புடன் உருவாக்கப்பட்ட 'சூப்பர் கம்ப்யூட்டரின்' பெயர் யாது?

*- 'பரம்'*

80. உலகில் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் ஆட்சி அமைந்த மாநிலம்?

*- கேரளம் (இந்தியா)*

81. ஐ.ந. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களின் முக்கிய அதிகாரம் என்ன?

*- 'வீட்டோ' செய்யும் (நிராகரிக்கும்) அதிகாரம்*

82. நவீன இஸ்ரேலை உருவாக்கியவர் யார்?

*- டேவிட் பென் கொரியன்*

83. 'இவா பிரவுன்' யாருடைய காதலி? (ஹிட்லர் / முசோலினி / நெப்போலியன்)

*- ஹிட்லர்*



## இலங்கையின் நீர்வீழ்ச்சிகள்

| நீர்வீழ்ச்சிகள் | அமைந்துள்ள நகரம் | உயரம் அடி |
|---|---|---|
| 1. பம்பரகந்த | பெலிஹுல்ஓய | 863 |
| 2. தியலும | கொஸ்லந்தை | 722 |
| 3. குருந்துஓய | நுவரெலியா | 676 |
| 4. ஒலு | அமனாவலை | 656 |
| 5. மாப்பனான | இரத்தினபுரி | 486 |
| 6. லக்ஷபாண | நோர்ட்டன் பிரிட்ஜ் | 413 |
| 7. மககந்துர | ஹங்குரங்கெத்த | 383 |
| 8. கிரிந்தி | இரத்தினபுரி | 381 |
| 9. இரம்பொடை | புசல்லாவை | 358 |
| 10. நவரத்ன | ஹசலக்க | 358 |
| 11. பூண்டுலோயா | புசல்லாவை | 328 |
| 12. அபர்தீன் | நோர்ட்டன் பிரிட்ஜ் | 322 |
| 13. டெவன் | தலவாக்கலை | 318 |
| 14. சென்ட்கிளயார் | தலவாக்கலை | 263 |
| 15. துன்ஹிந்த | பதுளை | 207 |
| 16. ஹுந்தபான | இறக்குவானை | 200 |
| 17. சீதாகொட்டுவ | குருளுபொத | 200 |
| 18. யக்காஎண்டு எல்ல | மஸ்கெலியா | 200 |
| 19. நானுஓய | நானுஓய | 197 |
| 20. அலகொல | உடபுசல்லாவை | 197 |
| 21. ஹுன்னஸ் | கண்டி | 197 |
| 22. மன்னகெத்தி | கித்துல்கலை | 197 |
| 23. அலுபொல | இரத்தினபுரி | 197 |
| 24. பெரவத்த | இரத்தினபுரி | 164 |
| 25. பேருவெல்ல | எல்ல | 164 |
| 26. பாண்டிஓய | இரத்தினபுரி | 150 |
| 27. தினி ஓய | பொகவந்தலாவை | 150 |
| 28. இராஜமலை நீர்வீழ்ச்சி | மஸ்கெலியா | 150 |
| 29. கெரண்டி நீர்வீழ்ச்சி | பலாங்கொடை | 150 |
| 30. ஆந்தாவெல நீர்வீழ்ச்சி | ஹங்குரங்கெத்த | 131 |
| 31. தெஹெறன நீர்வீழ்ச்சி | இரத்தினபுரி | 131 |
| 32. இராவணா நீர்வீழ்ச்சி | வெள்ளவாய | 131 |
| 33. துவிலி நீர்வீழ்ச்சி | கல்தோட்டை | 131 |
| 34. மோகினி நீர்வீழ்ச்சி | நல்லத்தண்ணீர் | 100 |
| 35. தொடம்கல்லன | பலாங்கொடை | 100 |
| 36. களுவாபென்ன நீர்வீழ்ச்சி | ஹசலக | 100 |
| 37. பப்புளுகல நீர்வீழ்ச்சி | பெலிஹுல் ஓய | 100 |
| 38. போபத் எல்ல | இரத்தினபுரி | 100 |

## பம்பரகந்த நீர்வீழ்ச்சி

இலங்கையிலே மிக உயரமான நீர்வீழ்ச்சியான பம்பரகந்த நீர் வீழ்ச்சி 863 அடி உயரமானதாகும். இந்நீர்வீழ்ச்சி 1470 மீற்றர் உயரமான பம்பரகல மற்றும் 1375 மீற்றர் உயரமான வெலிஹேனை ஆகிய மலைகளுக்கிடையே உருவாகின்றது. ஒரு பேசினைப் போன்ற தோற்றமு டைய இந்நீர்வீழ்ச்சியானது அடர்ந்த காடுகளால் சூழப்பட்டுள்ளதோடு உயர்ந்த பாறைகளுக்கிடையே ஓடிப் பாய்ந்து விழுகின்றது. பலாங் கொடையிலிருந்து கலுபஹன நகரம் மற்றும் வீரகோன்கம ஆகிய இடங் களை கடந்து இவ்விடத்தை அடைய முடியும்.

## தியலும நீர்வீழ்ச்சி

722 அடி உயரமான இந்த நீர் வீழ்ச்சியானது இலங்கையின் இரண்டாவது உயரமான நீர்வீழ்ச்சியாகும். பூனாகல ஓய ஆற்றில் உருவாக்கம் பெறும் தியலும நீர்வீழ்ச்சியின் நீர் குடாஓய வழியாகக் கிரிந்தி கங்கையுடன் கலக்கின்றது. பின்னர் திஸ்ஸமகாராமவிற்கருகில் அந்நீர் கடலில் சங்கமமாகின்றது. பலாங்கொடை - வெள்ளவாய பிரதான பாதைக்கருகில் இந் நீர்வீழ்ச்சியைக் காணலாம்.

## ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இலங்கையின் சாதனை

2006ம் ஆண்டில் இலங்கை நெதர்லாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 9 விக்கட் இழப்பிற்கு 443 ஓட்டங்களைப் பெற்றமை உலக சாதனையாக அமைந்து விட்டது.

இதற்கு முன்னர் ஓர் அணி ஒருநாள் போட்டியொன்றில் பெற்ற அதிகூடிய மொத்த ஓட்ட எண்ணிக்கையாக அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியொன்றில் தென்ஆபிரிக்கா அணி பெற்ற 438 ஓட்டங் களே (2006 பெப்ரவரி) சாதனையாகத் திகழ்ந்தது.



அதுமட்டுமன்றி இப்போட்டியில் கலந்து கொண்டதன் மூலம் இலங்கை அணியின் வீரர் சனத் ஜயசூரிய உலகிலேயே கூடிய ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டவர் என்ற சாதனையையும் நிகழ்த்தி யுள்ளார். இதன்படி ஜயசூரிய 363 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார். இப்போட்டியின் போது ஜயசூரிய 157 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஒருநாள் போட்டிகளில் மொத்தமாகப் 11,000 ஓட்டங்களைப் பெற்றோரில் மூன்றாவது இடத்தையும் பிடித்துக் கொண்டார்.

(தகவல் 2006 செப்டம்பர்)

## சதுரகராதி


முழுமையான அகர நிரல் முறை கொண்ட முதல் தமிழ் அகராதி சதுரகராதி. இந்நூல் கி.பி. 1732 இல் கான்சுடன்டைன் ஜோசப் பெசுகி எனும் இயற்பெயரையுடைய வீரமாமுனிவரால் ஆக்கப்பட்டது. சதுரகரா தியின் சிறப்பும், பயனும் கி.பி. 19ம் நூற்றாண்டில் மட்டும் ஒன்பது பதிப்புக்கள் அச்சில் வெளிவந்துள்ளன.

முதற்பதிப்பு முழுமையாக கி.பி. 1824ல் வெளிவந்தது. பெயர், பொருள், தொகை, தொடை எனும் 4 பகுதிகளைக் கொண்டமையினால் சதுரகராதி எனும் பெயர் பெற்றது. முதற்பகுதியான பெயரகராதி ஒரு சொல் பல்பொருள் பெயர்த்தொகுதியாகும். அதில் 12,187 சொற்கள் இடம்பெறுகின்றன.

அகர நிரன்முறை உயிரெழுத்துக்களில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என இக்காலத்தைப் போன்றே பின்பற்றப்பட்டுள்ளது. சதுரகராதிக்குப் பின்னர் தோன்றிய அனைத்து அகராதிகளுக்கும் மூலமாகச் சதுரகராதி அமைந்துள்ளது.

## த டாவின்சி கோர்ட்

2006 ம் ஆண்டில் உலக அரங்கில் திரையிடப்பட்ட திரைப்படங் களுள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய திரைப்படமே 'த டாவின்சி கோர்ட்' (The Davinci Code) எனும் திரைப்படமாகும். இத்திரைப்படம் உலக கிறிஸ்தவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள அதேநேரத்தில் இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய பல நாடுகள் இத்திரைப் படத்தை திரையிடுவதைத் தடைசெய்தன.




எல்லாம்வல்ல கடவுள் இயேசு கிறிஸ்துவாக மனித உருவெடுத்துப் பிறந்தவரென்று கிறிஸ்தவர்களின் வேதநூலான வேதாகமம் கூறுகின்றது. 'டாவின்சி கோர்ட்' என்ற திரைப்படமானது மேற்படி இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை சித்தரிப்பதாகக் கூறி, உண்மைக்கு மாறான வகையில் திரைப் படத்தை உருவாக்கியிருப்பதாகக் கூறிக் கிறிஸ்தவர்கள் இதற்குத் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

குறிப்பாக இயேசுநாதர் திருமணம் செய்வது போல் இத்திரைப் படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளதும், வரலாற்று சான்றுகளை முன்வைத்து பல கருத்துக்களைத் திரிபுபடுத்த எத்தனித்திருப்பதும் கிறிஸ்தவ மதத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதாக கூறப்படு கின்றது.

'ரொக் ஹொவார்ட்' என்பவரால் தயாரிக்கப்பட்டிருக்கும் இத்திரைப் படமானது ஏற்கனவே 'டான் பிரவுன்' என்பவரினால் எழுதப்பட்ட நூலொன்றைத் தழுவியே திரைப்படமாக்கப்பட்டது. இத்திரைப் படத்திற்கு எதிர்ப்பு அதிகரித்துள்ள நிலையில் 'அதுவோர் இலவச விளம்பரமாக மாறி'க் குறித்த நூலின் பிரதிகளும் உலக அளவில் கூடிய அளவில் விற்பனையாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இத்திரைப்படம் தொடர்பாக மக்களின் எதிர்ப்புக்கள் உலக நாடுகள் பலவற்றிலும் அதிகரித்த வண்ணமே உள்ளன.





## பலஸ்தீனத்தில் ஹமாஸ் ஆட்சி

2006 ம் ஆண்டு ஆரம்பத்தில் பலஸ்தீனத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இஸ்லாமிய அடிப்படையிலான கட்சியான ஹமாஸ் இயக்கம் பாரிய வெற்றியைப் பெற்று உலக நாடுகளை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. 1980 ம் ஆண்டு தொடக்கம் இஸ்ரேலுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி வந்துள்ள இந்த ஹமாஸ் இயக்கம் நாடாளுமன்றில் உள்ள 132 ஆசனங்களில் 76 ஆசனங்களை வெற்றியீட்டியது. ஆளும் கட்சியாக இருந்த மஹ்மூத் அப்பாஸின் தலைமையிலான 'பாட்டா' கட்சியே இத்தேர்தலில் தோல்வியுற்றது.

பலஸ்தீனத்தில் ஹமாஸ் போராளி இயக்கம் ஜனநாயகத் தேர்தலின் மூலம் வெற்றியீட்டி அட்சி அமைத்துள்ளமையின் காரணமாக அந்நாட்டிற்கான உலக நாடுகளின் உதவிகள் நிறுத்தப்படக்கூடாது என உலக வங்கியின் தலைவர் வொல்.'. பென்சோன் சஞ்சிகையொன் றிற்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். பலஸ்தீனம் உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கு வழி விடுமாறு ரஷ்யா, ஐரோப்பிய சங்கம், அமெரிக்க ஆகிய நாடுகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இஸ்ரேலை அங்கிகரித்து, அதனை யோர் தனி நாடாக அனும திக்குமாறும், இல்லையேல் பலஸ்தீனத்தின் மீது அழுத்தங்களை ஏற்படுத் தும் விதமாக உதவிகள் நிறுத்தப்படும் என்றும் குறித்த நாடுகள் அச்சுறுத் தியிருந்தன.

## ஒளிபரப்பில் சாதனை

2004 ம் ஆண்டு எதன்ஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளை உலக நாடுகளிலுள்ள 300 தொலைக்காட்சி நிலையங்கள் நேரடியாக ஒளிபரப் பியிருந்ததோடு, சுமார் 3.9 பில்லியன் ரசிகர்கள் இப்போட்டிகளைக் கண்டு களித் துள்ளதாகவும் கணக்கெடுப்பொன்று காட்டுகின்றது. இதற்கு முன்னர் சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளை தொலைக்காட்சி நிலையங்கள்மொத்தமாகக் குறைந்த மணி நேரங்களே ஒளிபரப்புச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன்படி இம்முறை 'எதன்ஸ்' ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்க என்.பி.ஸி. நிறுவனமும், யுனிவெர்சல் செனல் தொலைக்காட்சி நிலையமும் மொத்தமாக 1,210 மணித்தியா லங்கள் ஒளிபரப்பியிருந்தமை சிறப்பம்சமாக சுட்டிக் காட்டப்படுகின்றது. 2000 ம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் ஒளிபரப்பை விட இது 3 மடங்கு அதிகம் என்பதும், 1996ம் ஆண்டு அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளை விட 7 மடங்கு அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உலகிலே அகலமான நீர்வீழ்ச்சி

உலகிலேயே அகலம் கூடிய நீர்வீழ்ச்சியாகக் கருதப்படுவது ''நயாகரா'' நீர்வீழ்ச்சியாகும். அமெரிக்காவையும், கனடாவையும் பிரிக்கின்ற எல்லைக் கோட்டில் இந்த நீர்வீழ்ச்சி காணப்படுவதால் இதன் ஒரு பகுதி அமெரிக்காவிற்கும், மறுபகுதி கனடாவிற்கும் உரித்துடையதாக உள்ளது.

மேற்படி ''நயாகரா'' நீர்வீழ்ச்சியானது அத்திலாந்திக் கடலின் சென்லோரன்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள கடல் பரப்பில் கலக்கின்றது. இதில் அமெரிக்க எல்லைக்குள் உள்ள நயாகராவின் உயரம் 167 அடிகளாகும். அகலம் 1060 அடிகளாகும். அவ்வாறே, கனடா எல்லைக்குள் இதன் உயரம் 158 அடிகளாகும். இந்த 'நயாகரா' நீர்வீழ்ச்சியானது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள 'கோட்' எனப்படும் தீவினூடாகவே பிரிபடுகின்றது.

குதிரை லாடத்தின் வடிவத்தை ஒத்துள்ள இந்நதியினைக் ε அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுமே பேணிக் காக்கும் நடவடிக்கை....... மேற்கொண்டு வருகின்றன. 1678 ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரொபர்ட் கெவலியர் என்பவரே ''நயாகரா'' நீர்வீழ்ச்சியினைக் கண்டுபிடித்தார். இதனையடுத்து 1885 ம் ஆண்டு தொடக்கம் இந்த நீர்வீழ்ச்சியானது உல்லாசப் பயணிகளின் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டது.

# உலகிலே உயரமான நீர்வீழ்ச்சி

வெனிசுவலா நாட்டிலுள்ள 'ஏன்ஜல்' நீர்வீழ்ச்சியே உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சியாகும். நெடிதுயர்ந்த மலையிலிருந்து பாயும் இந்த நீர்வீழ்ச்சி ''கரோனி'' எனப் பெயரிடப்பட்டுள்ள நதியாக உருவெடுக்கின்றது. இந்த 'ஏன்ஜல்' நீர்வீழ்ச்சியானது 3212 அடி உயரம் கொண்டதாகும். அதனை மீற்றரில் குறிப்பிடுவதென்றால் 912 மீற்றர்களாகும். வெனிசுவலா நாட்டு மக்கள் மத்தியில் 'ஏன்ஜல்' எனும் பெயரில் இந்நீர்வீழ்ச்சி மிகுந்த பிரபல்யத்தைப் பெற்றுள்ளது.

1935 ம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த விமானியான ஜிம் ஏன்ஜல் என்பவரின் சிறியரக விமானம் வெனிசுவலா நாட்டின் மலைப்



பகுதிகளின் மேலாக பறந்து கொண்டிருக்கையில் குறிப்பிட்ட ஒரு மலைப் பகுதியில் அவர் தனது விமானத்தை இறக்கினார். அப்போது அப் பகுதியில் அவர் கண்ட காட்சி அவரை திக்குமுக்காட வைத்தது. ஆம்... அங்கு காணப்பட்ட பாரிய மலையொன்றின் மீதிருந்து பால்சொரியுமாப் போல் நீர்வீழ்ச்சி மிக வேகமாக நிலம் நோக்கிச் சரிந்தோடுவதைக் கண்டார் அவர். இந்தக் காட்சியை அவர் இரசித்துக் கொண்டிருக்கும் நேரம் பார்த்து அவரது விமானத்தின் என்ஜின் செயற்பட மறுத்துவிட்டது. விமானம் செயலிழந்து விட்டமையினால் செய்வதறியாதிருந்த ஏன்ஜல், தனது விமானத்தை அங்கேயே விட்டு விட்டு சுமார் 11 மைல் தூரத்தைக் கால்நடையாக நடந்து மனித நடமாட்டமிக்க இடத்தை அடைய வேண்டியேற்பட்டது. பின்னர் தனது அந்த அரிய கண்டுபிடிப்பான நீர்வீழ்ச்சியைப் பற்றி அனைவருக்கும் அறியச் செய்தார். இவ்வாறு ஜிம் ஏன்ஜலினால் இந்த நீர்வீழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டமையினால் அதற்கு 'ஏன்ஜல்' என பெயர் சூட்டப்பட்டது.

ஏன்ஜல் நீர்வீழ்ச்சியானது கல், மண் ஆகியவற்றைக் கொண்ட பாரிய மலை முகடுகளைக் கடந்தே நீர்வீழ்ச்சியாக ஊற்றெடுக்கின்றது. இந்தக் கல், மண் கொண்ட மலைப்பகுதி 'டேபிள்' என அழைக்கப்படுகின்றது. மேசையின் வடிவில் காணப்படுவதாலேயே அதற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டது. இந்த நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தமைக்கு ஞாபகர்த்தமாக ஏன்ஜலின் அந்தச் சிறியரக விமானம் தற்போதும் அப்பகுதியில் ஒரு ஞாபகார்த்தச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உங்களுக்குத் தெரியுமா?**

300 ஆண்டுகளுக்கு முன்னர் றொபர்ட் ஹூக் (Robert Hooke) எனும் ஆங்கிலேய விஞ்ஞானி ஓக் மரத்தின் உயிரற்ற பட்டைப் பகுதியிலிருந்து மெல்லிய வெட்டுமுகமொன்றைப் பெற்று நுணுக்குக் காட்டியினூடாகச் சோதித்துப் பார்த்தார். அப்போது அவர். தேன் வதை மேற்பரப்பில் காணப்படும் துளைகளுடன் கூடிய அறைகளின் அமைப்பையொத்த ஓர் அமைப்பை அதில் கண்டார். ஆகவே தேன்வதை அறைகளையொத்த அலகுகளினால் அங்கிகள் உருவாகியுள்ளதாக முதன் முதலில் இனங்கண்டவர் றொபர்ட் ஹூக் ஆவார். அவ்வலகு கலம் (cell) எனப் பெயரிடப்பட்டது.

## உலகின் நீளமான நதிகள்

*அவுஸ்திரேலியாவின் நீளமான நதி - 'மரே டாலிங்'*

2740 கி.மீ. நீளத்தைக் கொண்ட 'மரே டாலிங்' நதியானது உலகிலுள்ள பிரதான நதிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. மிகுந்த அழகிய பிரதேசங்கள் ஊடாகச் செல்கின்ற இந்த நதிக்குச் சூழல் மாசடைவதினால் அசுத்தமடையக் கூடிய சாத்தியங்களும் இல்லாமலில்லை.

*வட அமெரிக்காவின் நீளமான நதி - 'மிஸிஸிப்பி'*

வட அமெரிக்காவின் நீளமான நதியாகக் கருதப்படும் 'மிஸிஸிப்பி' நதியானது, 6019 கி.மீ. நீளம் கொண்டதாகும். மிகுந்த சௌந்தர்யமான கரையோரப் பகுதிகளை இது கொண்டுள்ளது. வட அமெரிக்காவின் 'ரொக்கி' மலைப் பகுதியிலிருந்து ஆரம்பமாகின்ற மிஸிஸிப்பி நதியானது உலகிலுள்ள மிக நீளமான நதிகளுள் நான்காவது இடத்தை வகிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

*தென் ஆபிரிக்காவின் நீளமான நதி - 'அமேசன்'*

உலகில் சுத்தமான நீரில் 20 வீதமான நீரைக் கடலில் கலக்கின்ற நதியாக 'அமேசன்' திகழ்கின்றது. 6450 கி.மீ. நீளத்தையும், 11 கி.மீ. அகலத்தையும் கொண்டுள்ள அமேசன் நதி அத்திலாந்திக் கடலில் கலக்கின்றது.

*ஆபிரிக்காவின் நீளமான நதி - 'நைல்'*

உகண்டாவில் ஆரம்பித்து சூடான் ஊடாகச் செல்லும் வெள்ளை நிற நைல் நதியும், எத்தியோப்பியாவில் ஆரம்பித்து சயரே, கென்யா, தன்சானியா, புருனே ஊடாகச் செல்லும் நீல நிற நைல் நதியும் இணைந்ததே உலகிலே மிக நீளமான நதி எனக் கருதப்படும் நைல் நதியாகும். 6695 கி.மீ. நீளமுடைய நைல் நதியானது மத்திய தரைக் கடலிலேயே கலக்கின்றது.

*ஆசியாவிலேயே நீளமான நதி - 'யாங்சிக்கியாங்'*

ஆசியாவிலேயே மிக நீளமான நதியாகக் கருதப்படும் 'யாங்சிக்கியாங்' நதியானது சீனாவில் காணப்படுகின்றது. இதன் நீளம் 6380 கி.மீ. ஆகும். உலகில் மின் உற்பத்திக்குப் பயன்படும் பிரமாண்டமான நதியாகவும் இது கருதப்படுகின்றது.

*ஐரோப்பாவிலேயே நீளமான நதி - 'வொல்கா'*

ரஷ்ய நாட்டு மக்களின் வாழ்க்கையோடு ஒன்றித்து விட்ட நதியாகக் கருதக்கூடிய ஒரு நதியே 'வொல்கா' நதியாகும். இது 3688 கி.மீ. நீளம் கொண்டதாகும். கப்பலில் பொருட்களைக் கொண்டு செல்லும் போக்குவரத்திற்கு இந்நதி மிகவும் பயன்மிக்கதாக அமைந்துள்ளது. 'கஸ்பியன்' கடலிலேயே இது கலக்கின்றமையும் குறிப்பித்தக்கது.



# தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (SAF Games)

**'சார்க்' (SAARC) அமைப்பின் அங்கத்துவம் வகிக்கும் இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைத்தீவு, பூட்டான் ஆகிய நாடுகளுக்கிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் விளையாட்டுப் போட்டியே தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (SAF) எனப்படுகின்றன.**

**2006 ஆகஸ்ட் 18ம் திகதி முதல் 28 ம் திகதிவரை பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் கொழும்பில் நடைபெற்றது. இத்தடவை 'ஆப்கானிஸ்தான் முதற்தடவையாகக் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.**

## 1வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1984)

**முதலாவது (SAF) போட்டிகள் நேபாளத்தின் கட்மண்டூர் நகரில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் திகதி முதல் 24 ம் திகதிவரை நடைபெற்றது. நேபாளத்தின் மன்னன் Birendra Bir Bikram Shah Dev அவர்களால் இப்போட்டிகள் தெற்காசிய வரலாற்றில் முதற்தடவையாக கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. முதலாவது (SAF) போட்டிகளில் 372 போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவற்றுள் 105 போட்டிகள் நேபாளத்திலும், 98 போட்டிகள் இந்தியாவிலும், 53 போட்டிகள் பங்களாதேஷத்திலும், 41 போட்டிகள் இலங்கையிலும், 35 போட்டிகள் பூட்டானிலும், 24 போட்டிகள் மாலைதீவிலும், 6 போட்டிகள் பாக்கிஸ்தானிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. முதலாவது (SAF) போட்டிகளில் ஐந்து பிரதான நிகழ்ச்சிகளே இடம்பெற்றன. மெய்வல்லுனர் போட்டிகள், குத்துச்சண்டை, காற்பந்தாட்டம், நீச்சல், பாரம் தூக்கள் ஆகியனவே அவை.**

**வெற்றி பெற்ற பதக்க விபரங்கள் வருமாறு**

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 44 | 28 | 16 | 88 |

| | | | | |
|---|---|---|---|---|
| இலங்கை | 7 | 11 | 19 | 37 |
| பாக்கிஸ்தான் | 5 | 3 | 2 | 9 |
| நேபாளம் | 4 | 12 | 8 | 24 |
| பங்களாதேஷ் | 2 | 8 | 13 | 23 |
| பூட்டான் | 0 | 0 | 2 | 2 |
| மாலைதீவு | 0 | 0 | 1 | 1 |
| மொத்தம் | 62 | 62 | 61 | 185 |

## 2வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1985)

இரண்டாவது (SAF) போட்டிகள் பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி முதல் 26ம் திகதிவரை நடைபெற்றது. சகல போட்டிகளும் பங்களாதேஷத்திலேயே நடைபெற்றன. கபடி, ரெஸ்லின் ஆகியன இங்கு போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

வெற்றி பெற்ற பதக்க விபரங்கள் வருமாறு

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 61 | 32 | 14 | 107 |
| பாக்கிஸ்தான் | 21 | 26 | 12 | 59 |
| பங்களாதேஷ் | 9 | 17 | 38 | 64 |
| இலங்கை | 2 | 7 | 9 | 18 |
| நேபாளம் | 1 | 9 | 22 | 32 |
| பூட்டான் | 0 | 0 | 4 | 4 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 94 | 91 | 99 | 284 |

## 3வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1987)

மூன்றாவது (SAF) போட்டிகள் இந்தியாவில கல்கத்தா நகரில்1987 நவம்பர் 20ம் திகதி ஆரம்பமாகியது மூன்றாவது (SAF) போட்டிகளில் கலந்து கொள்ள ஆப்கானிஸ்தான் விண்ணப்பித்த போதிலும் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மேசைப்பந்து, கூடைப்பந்து, கரப்பந்து என்பன புதிதாக (SAF) போட்டிகளில் சேர்க்கப்பட்ட நிகழ்ச்சிகளாகும்.



வெற்றிபெற்ற பதக்க விபரங்கள் வருமாறு :

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 91 | 45 | 19 | 155 |
| பாக்கிஸ்தான் | 16 | 36 | 14 | 66 |
| இலங்கை | 4 | 7 | 23 | 34 |
| பங்களாதேஷ் | 3 | 20 | 31 | 54 |
| நேபாளம் | 2 | 7 | 33 | 42 |
| பூட்டான் | 0 | 1 | 5 | 6 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 116 | 116 | 125 | 357 |

## 4வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1989)

நான்காவது (SAF) போட்டிகள் பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் நகரில் 1989 அக்டோபர் மாதம் 20ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை நடைபெற்றது.

வெற்றிபெற்ற பதக்க விபரங்கள் வருமாறு :

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 61 | 43 | 20 | 124 |
| பாக்கிஸ்தான் | 42 | 33 | 22 | 97 |
| இலங்கை | 6 | 10 | 21 | 37 |
| நேபாளம் | 1 | 13 | 32 | 46 |
| பங்களாதேஷ் | 1 | 12 | 24 | 37 |
| பூட்டான் | 0 | 0 | 3 | 3 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 111 | 111 | 122 | 344 |

## 5வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1991)

தெற்காசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் முதற்தடவையாக இலங்கையில் 5வது (SAF) போட்டிகள் 1991ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச காலத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நீச்சல்துறையில் இலங்கை முதற்தடவையாக

அதிக பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் ஜூலியன் போலிங், தீபிகா சண்முகம் இருவரும் 13 தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தனர்.

வெற்றி பெற்ற பதக்க விபரங்கள் வருமாறு :

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 64 | 59 | 41 | 164 |
| இலங்கை | 44 | 34 | 40 | 118 |
| பாக்கிஸ்தான் | 28 | 32 | 25 | 85 |
| பங்களாதேஷ் | 4 | 8 | 28 | 40 |
| நேபாளம் | 2 | 8 | 29 | 39 |
| மாலைதீவு | 0 | 1 | 0 | 1 |
| பூட்டான் | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 142 | 142 | 163 | 447 |

## 6வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1993)

ஆறாவது (SAF) போட்டிகள் 1993ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி முதல் 27ம் திகதி வரை பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் நடைபெற்றது. சாம் வரலாற்றுப் புத்தகத்தில் ஜூடோ விளையாட்டு இப்போட்டியிலே பதிவாகியது.

வெற்றி பெற்ற பதக்க விபரங்கள் வருமாறு :

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 60 | 46 | 31 | 137 |
| பாக்கிஸ்தான் | 23 | 22 | 20 | 65 |
| இலங்கை | 20 | 22 | 39 | 81 |
| பங்களாதேஷ் | 11 | 19 | 32 | 62 |
| நேபாளம் | 1 | 6 | 15 | 22 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |
| பூட்டான் | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 115 | 115 | 137 | 367 |



## 7வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1995)

ஏழாவது (SAF) போட்டிகள் இந்தியாவில் சென்னை நகரில் 1995 டிசம்பர் 18ம் திகதி முதல் 27ம் திகதி வரை நடைபெற்றது. சென்னை போட்டிகளில் 'ஹொக்கி' முதற்தடவையாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

வெற்றி பெற்ற பதக்க விபரங்கள் வருமாறு

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 106 | 60 | 19 | 185 |
| இலங்கை | 16 | 25 | 53 | 94 |
| பாக்கிஸ்தான் | 10 | 33 | 36 | 79 |
| பங்களாதேஷ் | 7 | 17 | 34 | 58 |
| நேபாளம் | 4 | 8 | 16 | 28 |
| மாலைதீவு | 0 | 0 | 2 | 2 |
| பூட்டான் | 0 | 0 | 1 | 1 |
| மொத்தம் | 143 | 143 | 161 | 447 |

## 8வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1999)

எட்டாவது (SAF) போட்டிகள் 1999ம் ஆண்டில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 8வது சாப் போட்டிகள் தெற்காசிய நாடுகளில் ஏற்பட்டுவந்த அரசியல் காரணங்களின் நிமித்தமாகவும், சில இயற்கை அனர்த்தங்களின் நிமித்தமாகவும் பிற்போடப்பட்டு நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுரில் 1999 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம் திகதி முதல் அக்டோபர் மாதம் 4 ம் திகதி வரை நடைபெற்றது. இப்போட்டிகளில் 31 தங்கப்பதக்கங்களை வென்ற நேபாளம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

வெற்றி பெற்ற பதக்க விபரங்கள் வருமாறு

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 102 | 58 | 37 | 197 |
| நேபாளம் | 31 | 10 | 24 | 65 |
| இலங்கை | 16 | 42 | 62 | 120 |

| | | | | |
|---|---|---|---|---|
| பாக்கிஸ்தான் | 10 | 36 | 30 | 76 |
| பங்களாதேஷ் | 2 | 10 | 35 | 47 |
| பூட்டான் | 1 | 6 | 7 | 14 |
| மாலைதீவு | 0 | 0 | 4 | 4 |
| மொத்தம் | 162 | 162 | 199 | 523 |

## 9வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (2004)

2001 செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டிடங்கள் மீதும், அமெரிக்காவின் பெண்டகன் மீதும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கக் கூட்டுப்படைகள் யுத்தம் தொடுத்திருந்தன. தொடர்ந்து ஈராக் மீதும் யுத்தம் தொடுக்கப்பட்டன. இந்நிலைகள் தெற்காசிய நாடுகளில் பதற்ற நிலையைத் தோற்றுவித்தமையினால் 2001ம் ஆண்டு நடைபெறவிருந்த ஒன்பதாவது (SAF) போட்டிகள் பிற்போடப்பட்டு 2004ம் ஆண்டு மார்ச் மாதம் 29 ம் திகதி பாகிஸ்தான் இஸ்லாமாபாத் நகரில் ஆரம்பமானது.

ஒன்பதாவது (SAF) போட்டியின் நாடுகள் வெற்றி கொண்ட பதக்க விபரங்கள் வருமாறு:

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 103 | 57 | 32 | 192 |
| பாக்கிஸ்தான் | 38 | 55 | 50 | 143 |
| இலங்கை | 17 | 32 | 57 | 106 |
| நேபாளம் | 7 | 6 | 20 | 33 |
| பங்களாதேஷ் | 3 | 13 | 24 | 40 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 3 | 28 | 32 |
| பூட்டான் | 1 | 3 | 2 | 6 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 175 | 169 | 813 | 552 |



## 10வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (2006)



பத்தாவது (SAF) விளையாட்டுப் போட்டிகள் 2006 ஆகஸ்ட் 18ம் திகதி முதல் 28ம் திகதி வரை இலங்கையில் கொழும்பு நகரிலும், கொழும்புக்கு வெளியேயுள்ள சில முக்கிய நகரங்களிலும் நடைபெற்றன. பத்தாவது சாப் போட்டிகளில் இலங்கை அதிகமான தங்கப்பதக்கங்களை வெற்றி கொள்ளும் என எதிர்பாக்கப்பட்ட போதிலும் 37 தங்கங்களை வென்று மூன்றாம் இடத்துக்கே வந்தது. தனிப்பட்ட போட்டியாளர்களிடையே 3 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் உட்பட 10 பதக்கங்களை நீச்சல் போட்டியில் கலந்து கொண்ட மயூமிரஹீம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நடைபெற்ற பத்தாவது (SAF) போட்டியில் முதற் தடவையாக ஆப்கானிஸ்தான் பங்குபற்றியது. ஆப்கானிஸ்தான் 06 தங்கங்களையும், 07 வெள்ளிகளையும், 18 வெண்கலங்களையும் வென்று ஐந்தாவது இடத்தைப் பிடித்துக் கொண்டது. இதனூடாக எதிர்காலங்களில் SAF) போட்டிகளில் முக்கியத்துவமானதொரு நாடாக மாறும் என எதிர் பார்க்க இடமுண்டு.

நாடுகள் வெற்றி கொண்ட பதக்கங்களின் விபரம் வருமாறு :

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம |
|---|---|---|---|---|
| இந்தியா | 118 | 69 | 47 | 234 |
| பாக்கிஸ்தான் | 43 | 44 | 71 | 158 |


| | | | | |
|---|---|---|---|---|
| இலங்கை | 37 | 63 | 78 | 178 |
| நேபாளம் | 9 | 15 | 31 | 55 |
| ஆப்கானிஸ்தான் | 6 | 7 | 18 | 31 |
| பங்களாதேஷ் | 3 | 15 | 32 | 50 |
| பூட்டான் | 0 | 3 | 10 | 13 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |

- இதுவரை நடைபெற்ற 10 போட்டிகளிலும் இந்தியாவே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.
- ஆறு தடவைகள் பாகிஸ்தானும், மூன்று தடவைகள் இலங்கையும் நேபாளம் ஒரு தடவையும் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளன.
- ஆறு தடவைகள் இலங்கையும், மூன்று தடவைகள் பாகிஸ்தானும், பங்களாதேசம் ஒரு தடவையும் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளன.
- சாப் போட்டிகள் இதுவரை நேபாளத்தில் இரண்டு தடவைகளும், பங்களாதேஷத்தில் இரண்டு தடவைகளும், இந்தியாவில் இரண்டு தடவையும், பாகிஸ்தானில் இரண்டு தடவையும், இலங்கையில் இரண்டு தடவையும் நடைபெற்றுள்ளன.
- மாலைதீவு, பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இது வரை சாப் போட்டிகள் நடைபெறவில்லை.

11 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி பங்களாதேஷத்தில் நடைபெறும்.



‘சிந்தனை வட்டத்தின் ௨௨7வது வெளியீடு’



வரையறுக்கப்பட்ட ‘சிந்தனை வட்டம்’
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

ISBN 955-8913-51-0